உ

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க ! வாழ்க !

திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வத் திருவடிகளே சரணம் !
திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள் திருவடிகளே சரணம் !

**சன்மார்க்க ஞானப்பேரொளி திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகளின்**

# 11 ஆம் ஆண்டு மகா குருபூஜை விழா

மற்றும் வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிச் செய்த

## திருஅருட்பா (பாகம் - 2) இசைப்பேழை வெளியீட்டு விழா அழைப்பிதழ்



தேள்கொடுக்காகி திரிந்த என்னை – வாக்கில்
மௌன மதாக்கிய பரசிவமே!

– திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள்

**திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள் அதிஷ்டானம்**
**திரு அருட்பிரகாச வள்ளலார் குருகுலம்**

சேலியமேடு, பாகூர் கொம்யூன்,
புதுச்சேரி - 607 402

பேரன்புடையீர்!

இப்பூவுலகில் மெய்ந்நெறி விளங்க, சன்மார்க்கம் தழைத்தோங்க பேரருள்நெறியான் கருணையொன்றே வடிவாகி எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டு அருள்மழை பொழியா நின்ற **"திருஞானசம்பந்தப் பிள்ளையாரது"** வள்ளற்றன்மையுள்ள மலர்போலுந் திருவடிகளை வணங்கியும், இயற்கை விளக்க நிறைவாகியுள்ள ஓர் சுத்த சிவானுபவ ஞானசபையில் அனவரதமும் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவஞ் செய்தருளும் எல்லாம் வல்ல தனித்தலைமை கடவுளாகிய **"அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராயும்"** சிவரகசியம் எல்லாம் தெரிவித்து நவநிலை காட்டும் ஞானசற்குருவாயும் விளங்கும் **"திருவருட்பிரகாச வள்ளலார்"** எனும் **"சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின்"** தெய்வத் திருவடிகளை வணங்கியும்,

அத்திருவடிகளின் பெருங்கருணையால் **"திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள்"** தனது முதற் குருவாகிய விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணத்திற்கு அருகில் குரும்பரத்தில் எழுந்தருளியுள்ள **தவத்திரு யோகி ஸ்ரீ அந்தோணிசாமி சுவாமிகளிடம்** வாசியோகம், சிவயோகம், இராஜயோகம் மற்றும் சிவராஜயோகம் போன்ற உயர்ந்த யோகஞான உபதேசங்களை பயின்று கிடைப்பதற்கரிய மேலான முரீது என்னும் தீட்சை பெற்று **தக்பீர் முழக்கத்துடன்** யோகஞான அனுபவம் பெற்றார்கள். அதன் பின் புதுவை **சற்குரு கணபதி மகான் சுவாமிகளிடமும்**, சென்னை **வேப்பேரி பிரம்மவித்தியா சங்கத்திலும்** மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் **மெய்வழிச்சாலை ஆண்டவர்களிடத்திலும்** ஞானயோக உபதேசங்களை பெற்றும், பல ஞானயோக வித்தைகளை பயின்றும், இறுதியாக விழுப்புரம் மாவட்டம் **ஒட்டம்பட்டு சற்குரு சாதனைச் சித்தர் ஸ்ரீலஸ்ரீ சண்முக அடிகளாரிடம்** பிரதான சீடராகி திருஅருட்பிரகாச வள்ளலார் சுவாமிகள் கையாண்ட சாத்திரங்களையும், திருஅருட்பா உட்பொருளையும், **சீகாழி திருஞானசம்பந்தர் சுவாமிகளின்** திருவருள் பெற்ற **ஸ்ரீ காழிகண்ணுடைய வள்ளல் சுவாமிகள்** திருவாய் மலர்ந்தருளிய ஒழிவிலொடுக்கம் மற்றும் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) **அருள்மிகு ஸ்ரீ குமாரதேவர் சுவாமிகளின் சுத்தசாதகம்** முதலிய 16 சாத்திரங்களின் உட்பொருளையும் பயின்று, உணர்ந்து, அனுபவித்தும் மற்றும் **சித்தர்களின் ஞானமும், ஸ்ரீ காகபுசுண்டர் சுவாமிகளின்** ஞான இரகசியங்களை அனுபவித்தும். சுத்தசன்மார்க்க அனுபவ ஞானம் பெற்றும் ஞான நிலையில் முதிர்வு பெற்றார்கள்.

வான்பற்றி நின்ற மறைபொருளில் எழாநின்ற சிவானந்தத்தேனை தாம் அனுபவஞ் செய்தவாறு ஞானாசாரிய அருளிலக்கணங்கள் அனைத்தும் நிரம்பி சுருதி, குரு, சுவாநுபவத்தால் தாம் அனுபவித்தறிந்த சிவானந்தப்பேற்றின் தன்மையைக் காருண்யத்தால் அடியவர்களும் பெற்றுய்வதற்கு **திருஅருட்பிரகாச வள்ளலார் குருகுலம்** நிறுவியும், மனதை சிற்சபையின்கண் நிறுத்தி, திருவடிசூட்டி ஞானதீக்கை வழங்கியும், ஜீவகாருண்யம், சுத்ததேகம், சாகாக்கல்வி, தத்துவமசி, சகசநிட்டை போன்ற பல உயர்ந்த ஞான உபதேசங்களை நூற்றுக்கும் மேற்பட்ட சீடர்களுக்கு அவரவர் அறிவின்கண் அருளுருவாய் நின்றறிவித்தும், ஆசாரியவுருவாய் வெளிநின்று அனுக்கிரகித்தும், இல்லறத்தார்க்கு இடுக்கண்களை விலக்கியும் மற்றும் பரவித்தை, பிரம்ம வித்தை, வகரவித்தை, தகரவித்தை மற்றும் பல ஞானயோக வித்தைகளோடு ஞான உபதேசம் செய்தருளியும், இப்பூவுலகில் பல ஞானிகளுடனும், சித்தர்களுடனும் சகச நிட்டையில் சஞ்சரித்தும். நிறைவாக தெய்வத் தன்மை வாய்ந்த தென்பெண்ணை நதியின் தீர்த்தம் நிறைந்துள்ள பாகூர் சேலியமேட்டில் சித்தி ஷேத்திரமாகத் திருவுளங்கொண்டு தனது திருமேனியை நிறுத்தி, உளவறிந்த எல்லாம் நின்செயலாம் என உணர்ந்தோர்க்கு அளவில் அறிவானந்தமளித்து, ஆதியும் அந்தமும் இல்லா அம்பலத்தாடும் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் மலர்போலும் திருவடிகளில் ஐக்கியமடைந்து திருக்கோயில் கொண்டு விளங்கும் சன்மார்க்க ஞானப்பேரொளி திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகளின் 11 ஆம் ஆண்டு மஹா குருபூசை விழா திருஅருட்பிரகாச வள்ளலார் குருகுலத்தில்,

நிகழும் வள்ளலார் ஆண்டு **புரட்டாசி மாதம் 11 ஆம் தேதி (27.09.2024) வெள்ளிக்கிழமை பூசம் நட்சத்திரம்** அன்று நடைபெறுவதால், அன்பர்கள் அனைவரும் தத்தம் பரிசனஞ் சூழவந்து, தரிசனம் செய்து குருவருளைப் பெற்று திருவருள் ஞானம் மேலிட்டு பேரானந்த சித்திப் பெருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் அழைத்து தெய்வத் திருவருளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்,
**சீடர்கள் மற்றும் திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள் குடும்பத்தினர்.**

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

# திருவருட்பா

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி!

எல்லாம் வல்ல இயற்கை உண்மை நிறைவாகிய, தனித்தலைமை கடவுளாகிய **அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின்** திருவருள் பெற்று **அருட்பெருஞ்ஜோதியாய்** எங்குமாய் நிறைந்து விளங்கி எவ்வுயிரும் இன்பமடைதற்பொருட்டு அருள்மழை பொழியும் **வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார்** எனும் **சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்** திருவாய் மலர்ந்தருளிச் செய்த **திருவருட்பா.**

திருவருள் விளங்கும் திருக்கூட்டமரபில் மகனே! நீ செயலனைத்தும் அருளொளியால் காண்க என திருவுளம் பற்றச் செய்தருளிய ஞானதேசிக குரு மாமணியாய் விளங்கும் வள்ளல் குருராயன் தமிழ்க்காழி திருஞானசம்பந்த சுவாமிகளை ஞானகுருவாகக் கொண்டு, அருட்பெருஞ்ஜோதியாய் உலகம் தழைக்க வந்துதித்து **"ஜீவகாருண்யம்"** என்னும் ஞானத்தெருள் நிறைந்து எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் சுத்தசன்மார்க்க பேருபதேசப் பொதுநெறியை ஞான உபதேசம் செய்தருளிய திருவருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள், தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டம் மருதூரில் **1823** புரட்டாசி **21** ஆம் திருநாள் தெய்வத் திருவாளராக அவதரித்தார்கள்.

குழந்தை பருவத்திலேயே அனவரதமும் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் செய்தருளும் தில்லை சிதம்பரம் சிவகாமவல்லி மகிழ் அம்பலவாணரின் சிற்றம்பல மாநடனம் தரிசனம் கண்டு சிவமாலை அணிந்தும் சென்னையில் வாழ்ந்து வருங்காலங்களில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு சிறுபருவமாகிய ஒன்பதாவது அகவையில் கண்ணாடியில் தடம் கண்ட கந்தவேலே என்று முருகப்பெருமானின் அருள் தரிசனம் கண்டு ஓதாது உணர்ந்திட திருவருள் பெற்றும், குமாரப் பருவத்தில் திருவொற்றியூர் வடிவுடை மாணிக்கமாகிய தெய்வ வடிவாம்பிகை அம்மையின் தெய்வ தரிசனம் கண்டு தெய்வத் திருக்கரங்களால் ஞானஅமுது உண்டும் திருவொற்றியூர், திருத்தணிகை, கந்தகோட்டம் மற்றும் பல திருத்தலங்களில் இறைவனைப் போற்றி புகழ்ந்து திருவருள் மணம் வீசும் **"திருவருட்பா"** திருமுறைகளை அருள் மழையாக பொழிந்தும், திருஞானசம்பந்த சுவாமிகள் திருவருள் பெற்ற சீகாழி கண்ணுடையவள்ளல் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிச் செய்த **"ஒழிவிலொடுக்கம்"**, திருமுதுகுன்றம் விருத்தாசலம் அருள்மிகு ஸ்ரீ குமாரதேவர் சுவாமிகள் ஆதினம் அருள்மிகு ஸ்ரீமுத்தைய சுவாமிகள் அருளிய **"சின்மய தீபிகை"** மற்றும் **"தொண்டமண்டல சதகம்"** முதலிய ஞான நூல்களை தமது சீடர்களுக்கு ஞான உபதேசம் செய்தருளி பதிப்பித்தார்கள்.

ஏடகத்தே எழுதாத மறைகளெல்லாம் களித்தே என் உள்ளகத்தே எழுதி வைத்த என்னுரிமை பதியே என்று திருஅருட்பாக்களை வழங்கிவரும் காலங்களில் சென்னையிலிருந்து சென்று தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கருங்குழி, வடலூர், மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூர்களில் வாழ்ந்து வரும் காலங்களில் **"தண்ணீரால் விளக்கெரித்தும்"**, உயிர்களின் தாகம் தணிக்கவும், பிணிகளை போக்கவும் அருள்நீராக விளங்கும் **"தீஞ்சுவை நீரோடையை"** தோற்றுவித்தும், இறந்தவர்களை உயிர்பெற்று எழுந்திட சித்தாடல் புரிந்த வள்ளல் பெருமானின் அருட்செயல்களை கண்ட மக்கள் உள்ளம் மகிழ்ந்து அகம் குளிர்ந்தார்கள்.

வடலூரில் **1865**-ஆம் ஆண்டு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை நிறுவி அன்பர்களுக்கு சன்மார்க்க ஞான உபதேசம் செய்து வரும் காலங்களில் தன்னை நாடி வருவோரின் பசிப்பிணியை போக்க **1867**-ஆம் ஆண்டில் வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையை நிறுவி திருவருட்பிரகாச வள்ளல் பெருமானின் திருக்கரங்களால் ஏற்றி வைத்த அடுப்பு இன்றும் ஜீவர்கள் பசியை ஆற்றுவிக்கிறது.

சாகாக்கல்வி, மரணமிலாப் பெருவாழ்வு என்னும் பேரின்ப சித்திப் பெருவாழ்வை ஞான உபதேசம் செய்தருளி அருட்பெருஞ்ஜோதியாய் எங்குமாய் நிறைந்து விளங்கி எல்லா உயிர்களும் இன்புற்று வாழ அருள் செங்கோலாட்சி செலுத்தி திருவருள் புரிந்த **திருவருட்பிரகாச வள்ளல் பெருமான், ஸ்ரீ முக வருடம் 1874-ஆம் ஆண்டு, தைத் திங்கள், 19-ஆம் நாள் வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரம் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத் திருமாளிகையில் சத்திய ஞானதீப விளக்கம் உபதேசம் செய்தருளி, சுத்த பிரணவ ஞான தேகத்துடன் வெளிப்படுவோம் என்றருளி, ஆதியும் அந்தமும் இல்லா அம்பலத்தாடும் எல்லாம் வல்ல தனித்தலைமை கடவுளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரோடு அருட்பெருஞ்ஜோதியில் அருள்வெளியில் கரைந்து அருட்பெருஞ்ஜோதியாய் ஆனார்கள்.**

இத்தகைய ஞானஇரகசியங்கள் பொருந்திய திருவருட்பா ஞானநூலை திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள் தன் ஞானகுருநாதராகிய சாதனைச் சித்தர் ஸ்ரீலஸ்ரீ சண்முக அடிகளார் சுவாமிகளின் அருளாக்கினையின்படி தமது சீடர்களுக்கு ஞானஉபதேசம் செய்தருளினார்கள்.

திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகளின் மகாகுருபூஜை திருநாளில் அருள் பொருந்திய திருவருட்பா ஞானநூல் இசைப்பேழையை திருஅருட்பிரகாச வள்ளலார் குருகுலம், திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள் அதிஷ்டானம் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராய் விளங்கும் திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானின் மலர்போலும் தெய்வத்திருவடிகளில் சமர்ப்பிக்கின்றது.

## நிகழ்ச்சி நிரல்

### நாள் : 26 செப்டம்பர் 2024 (வியாழக்கிழமை)

மாலை 6.30 மணி : குரு வணக்கம்
மாலை 6.40 மணி : வரவேற்புரை
மாலை 6.45 மணி : சன்மார்க்க ஞானப் பேரொளி **திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகளின்** அருள் வரலாறு
மாலை 7.00 மணி : திருவருள் ஞானவிளக்க சத்சங்கம்
"துரியமுங் கடந்த சுகபூ ரணந்தரும்
அரியசிற் றம்பலத் தருட்பெருஞ் ஜோதி"
மாலை 8.30 மணி : நன்றி உரை

### நாள் : 27 செப்டம்பர் 2024 (வெள்ளிக்கிழமை)

காலை 8.00 மணி : சமரச சுத்த சன்மார்க்க கொடி ஏற்றுதல்
**திரு. கு. கணேசன் ஐயா,** அவர்கள்
தலைவர், புதுச்சேரி தலைமை சன்மார்க்க சங்கம், புதுவை.
காலை 9.00 மணி : அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்
பகல் 12.00 மணி : திருவருட்பா (பாகம் – 2) இசைப்பேழை வெளியீடு
இசையமைத்து பாடியவர் சென்னை, திருமயிலை (மயிலாப்பூர்)
கபாலீஸ்வரர் திருக்கோயில் ஓதுவாமூர்த்திகள் திருவாசகச் செந்நாவலர்
**பா. சற்குருநாதன்** அவர்கள்
அருள் ஆசி உரை : திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம்
இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்கள், தமிழ்நாடு அரசு இந்து சமய
அறநிலையத்துறை உயர்நிலைக்குழு உறுப்பினர், கயிலைப் புனிதர்
**திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்** அவர்கள்
திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவண்ணாமலை
துறையூர் வீரசைவ ஆதீனத்தைச் சார்ந்த திருமுதுகுன்றம் விருத்தாசலம்
அருள்மிகு ஸ்ரீ குமாரதேவர் சுவாமிகள் திருமடம் குரு மகா சந்நிதானம்
**சீர்வளர்சீர் இரத்தின வேலாயுத சிவப்பிரகாச பரமாசார்ய சுவாமிகள்.**
பகல் 12.30 மணி : மஹா அன்னதானம் நடைபெறும்.

இங்ஙனம்,

**திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள் குடும்பத்தினர்** மற்றும் **சீடர்கள்,**
திருவருட்பிரகாச வள்ளலார் குருகுலம்,
திருவருள் ஸ்ரீ குமாரவேலு சுவாமிகள் அதிஷ்டானம்,
சேலியமேடு, புதுச்சேரி.

ஞாயிறுதோறும் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானின் ஞான உபதேசம் நடைபெறும்

தொடர்புக்கு : **thiruvarulvilakkam@gmail.com**
98947 88723, 98843 18943, 98944 26482, 88839 90999

திருச்சிற்றம்பலம்